DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கார்த்திக்சங்கர் | Father/Husband Name : கிருஷ்ணசாமி |
| Age : 52 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : உணவகத்தில் சப்லையர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Oct 13, 2025 4:25 PM

(Accused Present)( not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் சாத்தூரில் குடியிருந்து உணவகத்தில் சப்லையராக வேலை செய்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கில் விபத்து ஏற்படுத்திய நபர். அ.சா.1 எனது மனைவி ஆவார். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் சாத்தூர் மாரியம்மன் கோவில் செல்கின்ற ரோட்டில் டீக்கடையில் மாஸ்டராக வேலை செய்து வந்தார். எனக்கு தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. நானும், அ.சா.1 ஆனா எனது மனைவி மற்றும் எனது மாமனார் கருப்பசாமி ஆகியோர் பழைய படந்தால் ரோட்டில் இரவு 11.00 மணிக்கு மேல் நடந்து வந்கொண்டிருந்தபோது தேசியநெடுஞ்சாலையின் அருகேயுள்ள சர்வீஸ் ரோட்டில் நானும் எனது மனைவியும் நடந்து வந்துகொண்டிருந்தபோது எங்களுக்கு முன்னால் சர்வீஸ் ரோட்டினை கடந்து தேசியநெடுஞ்சாலையின் கிழக்கு பக்கமாக ரோட்டினை கடந்தபோது கார் ஒன்று எனது மாமனார் மீது மோதியது. சத்தம் கேட்டு நான் பார்த்தபோது எனது மாமனாருக்கு தலையிலும், கால், கை ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டது. மோதிய கார் நிற்காமல் சென்றுவிட்டது. விபத்து ஏற்படுத்திய காரினை ஓட்டிய நபர் ஆஜர் எதிரி ஆவார்.

3. பின்னர் அங்கு அருகில் இருந்த நபர் அவசர ஊர்திக்கு தகவல் கொடுத்தார். அங்கு வந்த அவசர ஊர்தியில் இருந்த நபர்கள் எனது மாமனார் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் இறந்துபோன எனது மாமனாரின் உடலை சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சம்பவம் நடந்து மறுதினம் நானும், எனது மனைவியும் காவல்நிலையம் சென்று புகார் மனு அளித்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

4. போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விபத்து நடைபெற்ற தேதியில் இரவு சுமார் 11.00 மணியளவில் விசாரித்தார்கள். போலீசார் அங்கு வைத்து என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று கேட்டார்கள், நான் கூறினேன். நானும் என்னுடைய மனைவியும் மறுநாள் காலை 7:00 மணிக்கு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம் என்றால் சரிதான். அந்த புகாரை என்னுடைய மனைவி தான் எழுதினார் என்றால் இல்லை. அந்த புகாரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

5. நாங்கள் என்னுடைய மாமனாரை அழைத்துக் கொண்டு எந்த பாதை வழியாக சென்றோம் என்றால் பழைய படந்தால் சாலை வழியாக சென்றோம். நானும் என்னுடைய மனைவியும் பேசிக் கொண்டே தான் நடந்து சென்றோம். சத்தம் கேட்ட பிறகு தான் நாங்கள் சம்பவத்தை திரும்பி பார்த்தோம் என்றால் சரிதான். எங்களுடைய வீட்டிற்கு செல்ல நான்கு வழிச்சாலையில் உள்ள பழைய படந்தால் விலக்கை தாண்டி, மேற்கு பக்கம் உள்ள சர்வீஸ் சாலையை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். என்னுடைய மாமனார் சாலையை கடந்து செல்வதற்காக சென்ற பாதை நாங்களாக நான்கு வழி சாலையில் ஏற்படுத்திக் கொண்ட பாதை என்றால் சரிதான். அந்த வழியாக அனைவரும் கடந்து செல்வார்கள், நாங்களும் சென்றோம். நான்கு வழி சாலையில் செல்லக்கூடாது என்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கம்பியை வளைத்து அந்த வழியாகத்தான் சென்றோம் என்றால் அதில் இரண்டு கம்பி இல்லாமல் இருந்தது.

6. நான்கு வழி சாலையின் கிழக்கு பக்கத்திலும் கம்பி இல்லாமல் தான் இருந்தது என்றால் கிழக்கு பக்கமும் மேற்கு பக்கமும் பள்ளி குழந்தைகள் செல்வதற்காக இரண்டு கம்பிகள் இல்லாமல் இருந்தது, அந்த வழியாகத்தான் நாங்களும் சென்றோம். அது நெடுஞ்சாலைத் துறையால் அனுமதிக்கப்பட்ட பாதை இல்லை என்றாலும், எங்களுடைய வசதிக்காக அங்கு உள்ள மக்களால் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் சரிதான்.

7. என்னுடைய மாமா திடீரென சாலையை கடந்த போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நாங்களும் என்னுடைய மாமனார் சென்று கொண்டு இருந்த இடத்திற்கும் இடையே சுமார் 50 அடி இருக்கும் என்றால் 20 அடி இருக்கும். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், வழக்கு விபத்தில் இறந்து போன நபர் என்னுடைய மாமனார் என்பதால் வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur